DECEMBER 2022 **U/ID 33228/UET6A**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் 30 சொற்களில் விடை எழுதுக.

1. முதல் தந்திரத்தில் உரைக்கும் செய்திகள் யாவை?

2. இளமை நிலையாமை குறித்து திருமூலர் தரும் செய்தி யாது?

3. அறம் செய்யாதவரை அடைவன யாவை?

4. அடியார்க்கு அருள்பவன் யார்?

5. யோகியின் வழிபாட்டை விளக்குக.

6. கிரியையாவது யாது?

7. சிவனுலகு எப்போது பெறலாம்?

8. அவவேடம் என்றால் என்ன?

9. தீவினையால் கெடுவது எங்ஙனம்?

10. இறைவனை எங்ஙனம் காணலாம் என்கிறார் திருமூலர்?

11. வீடு பேற்றுக்கு வழியாக இருப்பது எது?

12. சிவபூசை என்றால் என்ன?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் 200 சொற்களில் விடை எழுதுக.

13. திருமந்திரத்தின் இலக்கிய வரலாற்றை விவரிக்க.

14. திருமூலர் தரும் யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை கருத்துகளை விவரிக்க.

15. அன்புடைமை குறித்து திருமூலர் தரும் விளக்கத்தினை எழுதுக.

16. யோகத்தின் பயன்களை விவரிக்க.

17. சரியை நெறியின் சிறப்பை விளக்குக.

18. இறையருளின் பயனைத் தொகுத்துரைக்க.

19. சிவனின் இயல்புகளை விவரிக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் 500 சொற்களில் விடை எழுதுக.

20. திருமூலரின் வாழ்வியல் குறித்து ஒரு கட்டுரை வரைக.

21. அறத்தின் சிறப்பை எங்ஙனம் உணரலாம் - விளக்குக.

22. உடலோம்பல் உயிரோம்பல் நெறிகளை விவரிக்க.

23. அடியார் பெருமைகளாகத் திருமந்திரம் உரைப்பன யாவை?

24. எட்டாம் தந்திரம் மொழியும் வாய்மையும் ஒழுக்கமும் குறித்து விளக்குக.

———————